# කාර්යසාධනවාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

## 2016

## රාජ්‍යගිණුම්දෙපාර්තමේන්තුව
## அரச கணக்குகள் திணைக்களம்
## Department of State Accounts

මහාභාණ්ඩාගාරය பொது திறைசேரி General Treasury

කොළඹ 01 கொழும்பு 01 Colombo 01

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| **1.** | **அறிமுகம்** | | **01** |
| **2.** | **மீளாய்வு** | | **02** |
| **3.** | **அரசிறை புள்ளிவிபரங்கள் மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு** | | |
| | **3.1** | அரசிறை தகவல், அரசிறை புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை புதிய முறைமைக்கு அமைவாகத் தயாரித்தல் | **03** |
| | **3.2** | அரசாங்க மூலதனச் சொத்துக்களின் அட்டவணையைத் தயாரித்தல் | **04** |
| | **3.3** | அரசாங்கத்தின் சொத்துக்களை மதிப்பீடுசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களைக் கூட்டிணைக்கும் நடவடிக்கைகள | **04** |
| | **3.4** | கிரவுன் முகவர்களினூடாக பொருட்களினைக் கொள்வனவு செய்வதனைக் கூட்டிணைக்கும் நடவடிக்கை | **04** |
| | **3.5** | பொது வைப்புக் கணக்குகளை மேற்பார்வை செய்தலும் செயற்படுத்துதலும் | **05** |
| | **3.6** | திறைசேரியின் சார்பில் அரச கணக்ககள் செயற்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் | **05** |
| | **3.7** | மாகாண சபைகளின் நிதித் தகவல்களைத் திரட்டுதல் | **05** |
| **4.** | **பேரண்ட மற்றும் அட்டுறு கணக்குகள் பிரிவு** | | |
| | **4.1** | நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் | **06** |
| | **4.2** | புதிய சுற்றறிக்கைகளை வெளியிடுதல் | **06** |
| | **4.3** | பிரதான பேரேட்டுக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் நிருவகித்தல் | **06** |
| | **4.4** | அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களின் கணக்கு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் | **07** |
| | **4.5** | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவத் தொகுதியினூடாக அமைச்சுக்களின் / திணைக்களங்களின் நிலையான சொத்துக்களைக் கணக்குவைத்தல் | **08** |
| | **4.6** | வெளிநாட்டுக் கடன் வட்டியை மூலதனமயப்படுத்துதல் | **08** |
| | **4.7** | கணக்கு வைத்தல் சம்பந்தமாக பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அறிவுரை வழங்குதல் | **09** |
| **5.** | **நிதித் தகவல் மற்றும் அறிக்கையிடல் பிரிவு** | | |
| | **5.1** | மாதாந்த கணக்குகளின் சுருக்கத்தைத் திரட்டுதல் | **10** |
| | **5.2** | ஆசிய பிராந்தியத்தின் அரச கணக்குள் அமைப்புகளின் சங்கத்தின் பொருளாளராக செயற்படுதல் | **11** |
| **6.** | **தொகுதி அபிவிருத்தி, பயிற்சி மற்றும் முற்பணக் கணக்குகள் பிரிவு** | | |
| | **6.1** | அரசாங்கத்தின் கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்துதல் மற்றும் அது தொடர்பான கணக்கு பதவியினரைப் பயிற்றுவித்தல் | **12** |
| | **6.2** | முற்பணக் கணக்குகளைச் செயற்படுத்துதல் | **14** |
| **7.** | **நிறுவன மற்றும் நிருவாக நடவடிக்கை** | | |
| | **7.1** | பதவியினர் | **19** |
| | **7.2** | நிறுவனக் கட்டமைப்பு | **20** |
| | **7.3** | வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல் | **21** |
| | **7.4** | திறன் விருத்தி மற்றும் அறிவு விருத்தி | **21** |
| **8.** | **நிதித் தகவல்கள்** | | **23** |
| | **8.1** | நிதிச் செயலாற்றுகை - 2016 | **24** |
| **9.** | **ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் தொகுதியை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உதவியை வழங்குதல்** | | **25** |
| **10.** | **2016 நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்** | | **26-36** |

## 1. அறிமுகம்

முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்காக அரசாங்கத்திற்கும் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அரசிறைத் தகவல்களை சமர்ப்பிப்பதனை நோக்காகக்கொண்டு அரசாங்க வருமானங்கள், அரசாங்க செலவினங்கள், முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகள் உட்பட இலங்கையின் அரசிறை நடவடிக்கைகளை அறிக்கையிடும் மத்திய நிறுவனமாக அரச கணக்குகள் திணைக்களம் தொழிற்படுகின்றது.

எமது நோக்கு அரசிறை தகவல்கள் தொடர்பில் உன்னத நிலையமாகத் திகழ்வதாகும். அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவின அலகுகள், மாவட்ட செயலகங்கள் தொடர்பான சகல செலவின மற்றும் வருமானத் தகவல்களையும் அதேபோன்று ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிக் கொள்கைகளுக்குரிய செலவினங்களையும் கவனத்திற்கொண்டு மாதாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்து சகல வருடங்களிலும் மார்ச் மாத இறுதியில் அரசாங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைமைகள் பற்றிய மிகச் சரியான பிரதிபிம்பத்தைக் பிரதிபலிக்கும் விதத்தில் வருடாந்தம் குடியரசு கணக்குகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கை பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறு தயாரிக்கப்படுகின்ற குடியரசுக் கணக்குகள் கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டதன் பின்னர், நிதி அமைச்சின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்துவதன் மூலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக, அரசிறை தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்ற வருமான, செலவின பகுப்பாய்வு மற்றும் வரவு செலவு நிலைமை பற்றிய குறிப்புகள் உள்ளிட்ட ஏனைய அரசிறைத் தகவல்களும் மேற்சொன்ன அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன. அதேவேளையில் அதற்கு இணையாக ஏனைய முகாமைத்துவத் தகவல்களும் இதன் கீழ் அரச கணக்குகள் திணைக்களத்தின்மூலம் வழங்கப்படுகின்றது.

நிதி ஒழுங்கு விதி 430 இல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு திறைசேரி புத்தகங்களிலிருந்து வெளிப்படுத்தப்படுகின்ற ஏனைய நிதித் தகவல்களை அறிக்கையிடுவதற்காகவும் கணக்காய்விற்காகவும் அந்தத் தகவல்கள் ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிப்பதும் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

எமத திணைக்களத்தினால் இலங்கைப் பாராளுமன்றம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் ஆகியவற்றுக்கு நிதித் தகவல் பகுப்பாய்வு நடவடிக்கை மற்றும் அரசிறை முகாமைத்துவப் பணிகள் ஆகியவற்றுக்குத் தேவையான நிதித் தகவல்களை வழங்கும் நடவடிக்கையும் பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக அரசிறைத் தகவல்ளை, ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரங்களுக்கு அமைவாக தயாரிப்பதன் மூலம் இணக்கப்பாட்டையும் அறிக்கையிடலையும் மேம்படுத்துவதும் எமது பிரதான செயற்பணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 2. மீளாய்வு

2016 ஆம் ஆண்டுக்குத் திட்டமிடப்பட்டவாறு திணைக்களம் தனது குறிக்கோள்களை உரிய விதத்தில் நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அதில் பிரதானமாக அரசிறைத் தகவல்களை அறிக்கையிடுவதனை மேம்படுத்துதல், வினைத்திறன் மற்றும் அவற்றின் தரம் ஆகியவற்றைப் பேணிக்கொள்ளும் பொருட்டு எமது திணைக்களத்தின் நிபுணத்துவ அறிவின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட "Windows" அடிப்படையாகக்கொண்ட புதிய CIGAS மென்பொருளில் தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டிய மேம்படுத்தல் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசேடமாக அரசாங்க கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் செயல்முறைகள் புதிய பாதையில் இட்டுச்சென்று நிலையான சொத்து முகாமைத்துவத் தொகுதியை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் அதனூடாக சகல அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மாவட்ட செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகள் ஆகியவற்றின் நிலையான சொத்துக்கள் உள்ளிட்ட கணக்கு அறிக்கைகளை உரியவிதத்தில் தயாரித்து உரிய காலஎல்லையில் அரச கணக்குகள் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றின் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி தெரியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் திறன்விருத்தி பொறுப்புக்களும் திணைக்களத்தின் மூலம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதிநிலைமைகள் பற்றிய சரியான பிரதிபிம்பத்தைப் பிரதிபலிக்கும் விதமாக வருடாந்த கணக்குகள் அட்டுறு அடிப்படையின் கீழ் தயாரிக்கின்ற விதம் பற்றி சகல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், இதன்போது அறிவை விருத்திசெய்வதற்கும் பிரச்சினைகள் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் நிதியாண்டின் இறுதியில் கணக்குகளைத் தீர்ப்பது பற்றிய தேவைகளை வழிகாட்டல்கள் சகல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்கி வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு மேலதிகமாக அட்டுறு அடிப்படையின் கீழ் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று உரிய விதத்தில் அந்தந்த நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள், முற்பணக் கணக்குகள், வைப்புக் கணக்குகள் மற்றும் சீராக்கக் கூற்றுக்கள் ஆகியவற்றை இந்தத் திணைக்களத்திற்கு வரவழைத்து அவற்றின் முறையானதன்மை மற்றும் பூரணத்துவம் என்பவற்றைப் பரிசீலணைசெய்வது தனது பொறுப்புக்களில் சிறப்பான மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. நிதித் தகவல்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு அமைவாகத் தயாரிப்பதன் மூலம் இணக்கப்பாட்டையும் அறிக்கையிடலையும் மேம்படுத்துவதனை நோக்காகக்கொண்டு வெளிநாட்டுக் கடன் வட்டியை மூலதனமயமாக்குவது இந்த வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது.

நிதி ஒழுங்குவிதிகளின் கீழும் ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இணங்கியதாகவும் அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கீடுகள் மாற்றுப் படிவங்களை பரிமாற்றிக் கொள்ளுதல் மற்றும் மேலதிக ஏற்பாடுகளை ஏற்பாடு செய்தல் போன்றவை சம்பந்தமாகவும் கடும் மேற்பார்வையுடன் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்துடன் இணைந்து உரிய விதத்தில் அவற்றைக் கணக்கு வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த சகல நடவடிக்கைகளின் மூலமும் சரியானதும் தர நிர்ணயங்களைக் கொண்டதுமான அரச கணக்குகள்

தகவல்களை வழங்குவதற்காக உயர்ந்த பட்ச முயற்சிகளை அரச கணக்குகள் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

இதனிடையே திணைக்களம் தனது திட்டமிடப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக உயர்முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்பட்ட பல நடவடிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. இந்த நடவடிக்கைகளினிடையே உத்தேச திறைசேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ தகவல் தொகுதியை (Integrated Treasury Management Information System - ITMIS) அபிவிருத்திசெய்யும் செயல்முறைக்கு செயற்பாட்டுப் பங்களிப்பையும் வழங்கியுள்ளது.

திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவினதும் பங்களிப்பு மற்றும் 2016 ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளுக்கு இணங்கியதாக திணைக்களத்தின் செயலாற்றுகை பின்வருமாறு.

## 3. அரசிறை புள்ளிவிபரங்கள் மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு

### 3.1 அரசிறை தகவல், அரசிறை புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை புதிய முறைமைக்கு அமைவாகத் தயாரித்தல்

திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அரசிறைத் தகவல்கள், அரசிறை புள்ளிவிபரங்கள், (Government Finance Statistics) 2001/14 கையேட்டில் அறிமுகப்படுத்தியுள்ள புதிய முறைமைக்கு அமைவாகத் தயாரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் இந்த வருடத்தில் தொடர்ந்தும் அபிவிருத்திசெய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன. 2016 ஜுன் 20 முதல் ஜுலை 01 ஆம் திகதிக்கு இடைப்பட்ட கால எல்லையில் சர்வதேச நாணய நிதியத்தின் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தொழிநுட்ப உதவியை வழங்கும் தூதுக்குழுவின் மூலம் இந்த புதிய முறைமை பற்றிய தொழிநுட்ப ஒத்துழைப்புச் செயலமர்வொன்று எமது திணைக்களத்தில் நடாத்தப்பட்ட அதேவேளையில், அதில் மத்திய அரசதங்கத்திற்குரிய அரசிறைப் புள்ளிவபரங்களைத் தயாரிக்கும்போது வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மானியம் வழங்கப்படுகின்ற, பொருளாதாரத்திற்குக் கூடுதலான பங்களிப்பொன்றைக் கொண்டுள்ள மற்றும் உபாயத்திட்ட நிறுவனமாக அடையாளம் காணப்பட்ட அரசாங்க துறைக்கு உரிய தொழில்முயற்சி நிறுவனங்களுக்குரிய புள்ளிவிபரங்கள் மத்திய அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களுடன் ஒருங்கிணைக்கும் விதம் பற்றிய தொழிநுட்ப அறிவை வழங்குவதும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மானியம் வழங்கப்படுகின்ற அரசதுறைக்குச் சொந்தமான 12 தொழில்முயற்சி நிறுவனங்களுக்குத் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அரசிறைப் புள்ளிவிபரங்களைப் புதிய முறைமைக்கு அமைவாகத் தாயரிக்கும் நடவடிக்கையைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் தொடர்ந்தும் மேம்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் எமது திணைக்களத்திற்கும் இடையில் தாபிக்கப்பட்ட 06 கூட்டுக்குழு கூட்டங்கள் இந்த வருடத்தில் நடாத்தப்பட்ட அதேவேளையில் 2015 ஆம் ஆண்டுக்காக அரசிறை புள்ளிவிபரங்களைத் தயாரிப்பதனை ஆரம்பிப்பதற்கு குழுவின் உறுப்பினர்கள் உடன்பாட்டைத் தெரிவித்தனர். அதன்பிரகாரம் 2015 ஆம் ஆண்டுக்காக அரசிறை புள்ளிவிபரங்களைத் தயாரிக்கும் நடவடிக்கை இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அரசிறை புள்ளிவிபர வகுதி ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவத் தகவல் தொகுதியில் (ITMIS) புதிய கணக்குகளைக் கவனத்திற்கொள்ளும்போது (Chart of Account) வகுதியுடன் சீராக்கம் செய்யப்பட்ட

அதேவேளையில் அதன்போது ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவத் தகவல் தொகுதியைத் தயாரிக்கும் குழுவின் உறுப்பினர்களுடன் கூட்டுக்கழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 3.2 அரசாங்க மூலதனச் சொத்துக்களின் அட்டவணையைத் தயாரித்தல்

மத்திய அரசாங்கத்தின் 2005 முதல் 2015 வரையில் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் அவற்றின் நிதியிடல் வழிகள் பற்றிய விபரமான அறிக்கையொன்றைத் தயாரித்து அரசாங்கத்தின் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அதில் மூலதனச் சொத்துக்களைக் கைக்கொள்ளுதல், மேம்படுத்துதல் மற்றும் ஏனைய முதலீட்டுச் செலவுகளுக்குரிய செலவு விடயங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த கருத்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டன.

## 3.3 அரசாங்கத்தின் சொத்துக்களை மதிப்பீடுசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களைக் கூட்டிணைக்கும் நடவடிக்கைகள்

அரசாங்கத்தின் அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் சொத்துக்களை மதிப்பீடுசெய்யும் செயல்முறையை அடிக்கடி மேற்பார்வை செய்து அதனைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை அரசாங்கத்தின் மதிப்பீடுசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றாத நிறுவனங்களுக்கு துரிதமாக அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பங்குபற்றுவதற்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்புவதன் மூலம் இதுவரை அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றாத 10 நிறுவனங்கள் 2016 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பதிததாக பங்குபற்றச் செய்யக்கூடியதாக இருந்தது. அதன்பிரகாரம் தற்போது 117 நிறுவனங்கள் இந்த மதிப்பீட்டுச் செயன்முறையில் பங்குபற்றியுள்ளன. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற அரசாங்க சொத்துக்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய 6,582 கோப்புக்களில் 6,266 கோப்புக்களில் உள்ளடங்கிய அரசாங்க சொத்துக்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகளை முடிவுறுத்தும் வாய்ப்பும் கிடைத்தன. மேலும் இதுவரை மதிப்பீடுசெய்யப்பட்ட ரூ.557 பில்லியன் பெறுமதியைக்கொண்ட 4,808 சொத்துக்கள் பற்றிய விபரம் தேசிய வருமானக் கணக்குகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்கும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.4 கிரவுன் முகவர்களினூடாக பொருட்களினைக் கொள்வனவு செய்வதனைக் கூட்டிணைக்கும் நடவடிக்கை

சுகாதார அமைச்சுக்கும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கும் அத்தியாவசியமான மருந்துகள் மற்றும் அடையாள அட்டை அச்சிடும் கடதாசிகள் என்பன க்ரவுன் முகவர்களினூடாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நேரடித் தலையீடு இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளையில் அதன்கீழ் 2016 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சுக்குரிய 31 இன்டென்டு பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட அதேவேளை அதன் பெறுமதி ரூ.மி. 208 ஆகும். அதேபோன்று ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு 04 இன்டென்டு

பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கப்பட்ட அதேவேளை அதன் பெறுமதி ரூ.மி.36 ஆகும்.

## 3.5 பொது வைப்புக் கணக்குகளை மேற்பார்வை செய்தலும் செயற்படுத்துதலும்

பொது வைப்புக் கணக்குகள் 11 தொகுதிகளின்கீழ் 181 வைப்புக் கணக்குகள் 2016 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டன. அரச கணக்குகள் சுற்றறிக்கை 243/2015 இற்கு அமைவாக மூடப்படவேண்டிய 6000/15 மற்றும் 6003 தொகுதியின் பொது வைப்புக் கணக்குகளை மூடுவதற்கு முன்னர் காணப்பட்ட 203 வைப்புக்களில் 2016 ஆம் ஆண்டில் 198 வைப்புக்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. அதேபோன்று 6003 மற்றும் 6000/15 தொகுதியின் இருபது வைப்புக் கணக்குகளின் பற்று மீதியும் செயற்படாக் கணக்குகளின் கீழ் காட்டப்பட்ட 71 வைப்புக் கணக்குகளின் பற்று மீதியும் 2016 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருமானத்திற்குப் பற்று வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் ரூ.3,859,555,389.76/- செயற்படாத மற்றும் மூடிவிடவேண்டிய தொகுதியின் வைப்புமீதி அரசாங்க வருமானத்திற்குப் பற்று வைக்கப்பட்டது. மேலும் செயற்படாக் கணக்குகள் மற்றும் ஏனைய வைப்புக் கணக்குகளின்கீழ் காணப்பட்ட நிலுவைகளைத் திருத்துவதற்கு தொடர்புடைய நிறுவனங்களை வரவழைத்து கூட்டங்களை நடாத்தி அறிவுரைகளை வழங்கி 15 கணக்குகள் பற்று மீதியிலிருந்து திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக திறைசேரியின் நானாவித வைப்புக் கணக்குகளில் கணக்குவைக்கும் நடவடிக்கையை முறைப்படுத்துவது தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட இல.209/2010 மற்றும் 218/2011 அரச கணக்குகள் சுற்றறிக்கையை இரத்துச் செய்து வருட இறுதியில் வைப்புக் கணக்குகளை சீராக்கம் செய்வதற்காக 249/2016 அரச கணக்குகள் சுற்றறிக்கையின்மூலம் புதிய மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டது.

## 3.6 திறைசேரியின் சார்பில் அரச கணக்கள் செயற்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்

2016 ஆம் ஆண்டுக்காக 76 அரச கணக்குகள் செயற்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்ட அதேவேளையில் அதில் சமர்ப்பிக்கப்படுகின்ற பொதுத் திறைசேரியின் அறிக்கைக்குத் தேவையான கணக்கறிக்கைகள் மற்றும் நிதிச் செயலாற்றுகை சம்பந்தமான தகவல்கள் எமது பிரிவினால் தயாரிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டன. மேலும் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய திணைக்களத்தின் பிரதிநிதிகளினால் கூட்டங்களின் போது எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக திணைக்களத்தின் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

## 3.7 மாகாண சபைகளின் நிதித் தகவல்களைத் திரட்டுதல்

மாதாந்தம் மாகாணசபைகளின் நிதித் தகவல்களைத் திரட்டி வருடத்தின் இறுதியில் வருமான, செலவு தகவல்களை அரசாங்கத்தின் இறுதிக் கணக்குகளுக்கு அட்டவணையாகச் சமர்ப்பிக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

## 4 பேரண்ட மற்றும் அட்டுறு கணக்குகள் பிரிவு

### 4.1 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 13(1) பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஆம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தயாரித்து கணக்காய்வாளர் அதிபதியின் அபிப்பிராயத்துடன் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக 2015 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளும் ஒருங்கிணைந்த வருமானக் கணக்குகளும் தயாரிக்கப்பட்டன.

### 4.2 புதிய சுற்றறிக்கைகளை வெளியிடுதல்

அரச கணக்கீட்டு நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் முறையாகவும் மேற்கொள்வதற்குப் பின்வரும் புதிய சுற்றறிக்கைகள் பேரண்ட மற்றும் அட்டுறு கணக்குகள் பிரிவினால் வெளியிடுவதற்டகு நடவடிக்கையெடுக்கப்பட்டன.

i. சேர்க்கப்பட்ட பெறுமதியின்மீது வரியைக் கணக்குவைத்தல் - அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 248/2016

ii. வெளித்தரப்பினர்க்கான முற்பணத்தொகையைச் செலுத்துவதனைக் கணக்குவைத்தல் - அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 250/2016 (i)

iii. 2016 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தீர்த்தல் - அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 251/2016

iv. 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இறுதிக் கணக்குகள் - அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 252/2016

v. 2016 ஆம் ஆண்டுக்கான வருமானக் கணக்குகள் - அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 254/2016

### 4.3 பிரதான பேரேட்டுக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் நிருவகித்தல்

இதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டின் 8,300 தொகுதியின் கீழ் பிரதான பேரேட்டில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறும் பொருட்டு 26 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் கலை நடவடிக்கை அபிவிருத்தி செயற்திட்டங்கள் 03 இற்கும், சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டங்கள் 01 இற்கும், நீர் வழங்கல் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 01 இற்கும், பாலம் அபிவிருத்தி செயற்திட்டங்கள் 03 இற்கும், வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 09 இற்கும், நீர்ப் பாதுகாப்பு செயற்திட்டங்கள் 02 இற்கும், சக்திவலு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 03 இற்கும், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 01 இற்கும், பால் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 01 இற்கும், சுகாதார அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 01 இற்கும், உள்ளுராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் செயற்திட்டங்கள் 01 இற்கும் கணக்ககள் திறக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக பின்வரும் புதிய பிரதான பேரேட்டுக் கணக்குகள் திறக்கப்பட்டன.

| பிரதான பேரேட்டுக் கணக்குகள் தொகுதி | பிரதான பேரேட்டுக் கணக்குகளின் இலக்கங்கள் | 2016 ஆம் அண்டில் திறக்கப்பட்ட உப பேரேடு |
|---|---|---|
| குத்தகைச் சொத்துக்களுக்கான முதலீடு | 9183 | - |
| தபால் திணைக்களத்தினால் முகவர் நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் | 9184 | - |
| சேர்க்கப்பட்ட பெறுமதியின்மீதான வரி சீராக்கல் கணக்குகள் | 9185 | 04 |
| திறைசேரியின் பிணைமுறி மிகைவிலை | 9186 | - |
| திறைசேரியின் பிணைமுறி கழிவுகள் | 9187 | - |
| வாடகை மற்றும் வேலைமுற்பணக் கணக்கு | 9188 | 23 |
| வாடகை மற்றும் வேலைமுற்பண ஒதுக்கக் கணக்கு | 9189 | 23 |
| அந்நியச் செலாவணி காலத்திற்கேற்ற நிதிவசதிகள் கணக்கு | 9190 | - |
| அந்நியச் செலாவணி காலத்திற்கேற்ற நிதிவசதிகள் முதலீட்டுக் கணக்கு | 9191 | - |
| திறைசேரி பிணைமுறி மீதான அட்டுறு வட்டிக்கணக்கு | 9192 | - |
| திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன்மீதான கழிவுக்கணக்கு | 9193 | - |

## 4.4 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களின் கணக்கு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்

2016 ஆம் ஆண்டினுள் 51 அரசாங்க அமைச்சுக்கள், 95 திணைக்களங்கள், 19 விசேட செலவு அலகுகள், 25 மாவட்டச் செயலகங்கள் மற்றும் 09 மாகாண சபைகளின் கணக்கு நடவடிக்கைகளைத் தொழிற்படுத்துதல் மற்றும் அதற்கான கணக்கீட்டுச் சேவை அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், மேலதிக ஒதுக்கீடு வழங்குதல் சம்பந்தமாக 1,355 அனுமதிப் பத்திரங்களை நிதி ஒழுங்கு விதி 66 மாற்றல் பத்திரம் 1,490 மற்றும் நிதி ஒழுங்கு விதி 69 இன் கீழ் மாற்றல் பத்திரம் 72 இற்காக கணக்கு வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.5 நிலையான சொத்துக்கள் முகாமைத்துவத் தொகுதியினூடாக அமைச்சுக்களின் / திணைக்களங்களின் நிலையான சொத்துக்களைக் கணக்குவைத்தல்

2016 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களை அறிக்கையிடவேண்டிய சகல அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ மாவட்ட செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளின் CIGAS நிகழ்ச்சித்திட்டங்களின் நிலையான சொத்துக்கள் முகாமைத்துவத் தொகுதியை செயற்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்ட அதேவேளையில் அதனூடாக அந்த நிறுவனங்களின் நிலையான சொத்துக்கள் பற்றிய தகவல்களைப் பொதுத் திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**2016.12.31 ஆம் திகதியில் நிலையான சொத்துக்களை அறிக்கையிடுதல்**

| நிலையான சொத்துக்களின் தொகுதி | அறிக்கையிட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூ. |
|---|---|---|
| கட்டடங்கள் மற்றும் நிர்மானம் | 76 | 95,468,226,952.00 |
| இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 180 | 142,061,798,642.00 |
| காணிகள் | 61 | 71,644,652,236.00 |
| மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகள் | 67 | 7,079,550,045.00 |

## 4.6 வெளிநாட்டுக் கடன் வட்டியை மூலதனமயப்படுத்துதல்

அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 230/2013 இன் பிரகாரம் வெளிநாட்டுக் கடன் நிதியிடலின்கீழ் மேற்கொள்ளப்படுகின்ற தகைமைகளைக்கொண்ட கருத்திட்டங்கள் தொடர்பான கடன் வட்டியை மூலதனமயப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதன்பிரகாரம் 11 கருத்திட்டங்களுக்குரிய ரூ.1,842,037,806.72 தொகை அந்தக் கருத்திட்டங்களின் செலவுக்கு மூலதனமயப்படுத்துவதற்க நடவடிக்கையெடுக்கப்பட்டது.

| கருத்திட்டத்தின் பெயர் | முதலீடு செய்யப்பட்ட வட்டி |
|---|---|
| (1) இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழான செயற்பாடுகள் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 48,071,258.38 |
| (2) மாத்தறை – பெலிஅத்த – கதிர்காமம் புதிய புகையிரதப் பாதை (இறக்குமதி ஏற்றுமதி வங்கி – சீனா) | 270,806,778.32 |
| (3) அறிவுமையத்தை அடிப்படையிலான பாடசாலைக் கல்வித் தொகுதியை மீளமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 70,580,130.08 |

| | |
|---|---|
| (4) மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - சவூதி – குவைத் - சீனா – ஒபெக்) | 1,222,428,884.22 |
| (5) நீர்வளங்கல் அபிவிருத்திக்கான முதலீட்டு கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - ஆசிய அபிவிருத்தி வங்கி) | 41,049,097.68 |
| (6) பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத்திற்கான மேலதிக நிதியிடல் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 20,022,349.94 |
| (7) காலநிலை தாக்கத்தைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 28,956,053.39 |
| (8) கட்டடங்கள் மற்றும் நிர்மானம் - வெளிச்சுற்று சுற்றுவட்டப் பாதை (கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய வரை) | 29,279,670.75 |
| (9) கொழும்பு புறநகரை அண்டிய நகர அபிவிருத்தி கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 68,541,097.52 |
| (10) உபாயத்திட்ட நகர அபிவிருத்தி கருத்திட்டம் (நகர அபிவிருத்தி) (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 28,109,273.32 |
| (11) நீர்வழங்கல் மற்றும் துப்பரவுஏற்பாடுகள் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 14,193,213.12 |
| **மொத்தம்** | **1,842,037,806.72** |

## 4.7 கணக்கு வைத்தல் சம்பந்தமாக பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அறிவுரை வழங்குதல்

சகல அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ மாவட்ட செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகள் 2016 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டுக் கணக்கிற்க மேலதிகமாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கள், நிதிநிலைமை பற்றிய கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றைத் தயாரித்து 2017.06.30 ஆம் திகதிக்கு முன்னர் அந்தக் கணக்குகளை கணக்காய்வாரள் அதிபதிக்கும் பிரதியொன்றைக்கொண்டதாக அரச கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக சமாதானக் கடமையின்பொருட்டு செலவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிதியை மீள்நிரப்பல் பற்றிய கணக்கு நடைமுறையொன்றை பாதுகாப்பு அமைச்சுக்கு அறிமுகப்படுத்தியமை, ஊழியர்சேமலாப நிதியத்தை கணக்குவைப்பது பற்றி தொழில் திணைக்களத்திற்கு அறிவுரை வழங்கியமை, கல்வி அமைச்சின் உப அலுவலகங்களில் வெளித்தரப்பினர்க்கான முற்பணங்களை வழங்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அந்த அமைச்சுக்கு அறிவுரை வழங்கியமை விஞ்ஞான, தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்கு சர்வதேச ரீதியில் கிடைக்கின்ற உதவிகளையும் அரச சார்பற்ற நிறுவனங்களின்மூலம் கிடைக்கின்ற உதவிகளையும் நி.ஒ.625(1), (2) மற்றும் (3) ஆகியவற்றின் பிரகாரம் கணக்குவைப்பதற்கு அறிவுரை வழங்கியமை, 2015 ஆம் ஆண்டில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, ரீல் கம்பனி ஆகியவற்றை முடிவுருத்துவதற்காக அரசாங்க தொழில்முயற்சித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச கணக்கு முறைமையில் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்களைச் சுட்டிக்காட்டியமை, திறைசேரி உண்டியல்களின் மிகை விலை மற்றும் குறைந்தவிலை ஆகியவற்றைக் கணக்குவைக்கும் முறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கணனி நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு மேலதிகமாக அட்டுறு கணக்குகளைத் தயாரிப்பது சம்பந்தமாக அந்தந்த நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கு இதுவரை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டுறு அடிப்படையின்கீழ் தயாரிக்கப்பட்ட கணக்குகளிலுள்ள குறைபாடுகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் 19 அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதல் களுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. 2015 ஆம் ஆண்டுக்குரியதாக தயாரிக்கப்பட்ட அட்டுறு அடிப்படைமீதான 64 இறுதிக்கணக்குகள் அரச கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**4.8** 2015 ஆம் ஆண்டுக்காக அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களடங்கிய அறிக்கையொன்றைத் தயாரித்தல். அதன்பிரகாரம் 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் மொத்தக் கடப்பாட்டினதும் அளவு ரூ.8,739,243,436/- ஆககக் காணப்பட்ட அதேவேளையில் அன்றைய திகதியில் பொறுப்புக்களின் அளவு ரூ.127,407,389,334/- ஆகக் காணப்பட்டது.

## 5. நிதித் தகவல் மற்றும் அறிக்கையிடல் பிரிவு

### 5.1 மாதாந்த கணக்குகளின் சுருக்கத்தைத் திரட்டுதல்

2016 ஆம் ஆண்டில் 51 அமைச்சுக்கள், 25 மாவட்டச் செயலகங்கள், 123 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மாதாந்தக் கணக்குச் சுருக்கங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினதும் குறைநிரப்பு மதிப்பீட்டினதும் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுகளாக ஒதுக்ககப்பட்டிருந்த தொகை 3,898 பில்லியன் ரூபா ஆகும். தொழிற்பாடுகளின் சிக்கல் வாய்ந்த தன்மை, கொடுக்கல் வாங்கல் முறைகள் மற்றும் நிறுவனங்களின் அளவு போன்ற விடயங்கள் அடிப்படையில் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மாதாந்தக் கணக்குச் சுருக்கத்தை சமர்ப்பிக்க வேண்டிய இலக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் தொடர்பான மாதாந்த கணக்கு தரவுகளை செய்ய வேண்டிய திகதியைக் குறிப்பிட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பிப்பதற்கு தாமதித்த நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக வருடத்தின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட போதும், பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட நினைவூட்டல்கள் மூலம் வருடம் முடிவடையும் போது தொடர்புடைய நிறுவனத்தினால் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தலானது மகிழ்ச்சிககரமான மட்டத்தை அடையப்பெற்றது என்பதை கீழே தரப்பட்டுள்ள பொதுத் திறைசேரியின் கணனி அச்சிடல் இணையத்தளத்திற்கு வெளியிடப்பட்டுள்ள திகதிகளின் மூலம் தெளிவாகின்றது. அதன் பிரகாரம் அந்தந்த மாதத்தின் உண்மைக் கணக்கு தகவல்களை முன்வரும் மாதத்தில் நடுப்பகுதியாகும் போது வெளியிடக் கூடியதாக இருந்ததென்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

| மாதம் | திறைசேரி கணனி அச்சிடல்களை வெளியிட்ட திகதி |
|---|---|
| சனவரி | 2016 மார்ச் 04 |
| பெப்ரவரி | 2016 மார்ச் 21 |
| மார்ச் | 2016 ஏப்ரல் 20 |
| ஏப்ரல் | 2016 மே 10 |
| மே | 2016 ஜூன் 09 |
| ஜூன் | 2016 ஜூலை 12 |
| ஜூலை | 2016 ஆகஸ்ட் 08 |
| ஆகஸ்ட் | 2016 செப்டம்பர் 08 |
| செப்டம்பர் | 2016 ஒக்டோபர் 06 |
| ஒக்டோபர் | 2016 நவம்பர் 08 |
| நவம்பர் | 2016 டிசம்பர் 07 |
| டிசம்பர் | 2017 சனவரி 13 |

இதற்கு மேலதிகமாக சேகரிக்கப்பட்ட செலவு மற்றும் வருமானத் தகவல்களை தெடர்ந்தும் பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுப்பதற்காக அந்த தகவல்கள் இலங்கை மத்திய வங்கி, புள்ளிவிபரவியல் திணைக்களம், அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம், திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

## 5.2 ஆசிய பிராந்தியத்தின் அரச கணக்குள் அமைப்புகளின் சங்கத்தின் பொருளாளராக செயற்படுதல்

ஆசிய பிராந்தியத்தின் அரச கணக்குள் அமைப்புகளின் சங்கத்தை (AGAOA) தாபிப்பதற்கு முன்னோடியாக இருந்து, அதன் ஆரம்ப உறுப்பினராகிய இலங்கை 2016 ஆம் ஆண்டினுள் இந்தச் சங்கத்தின் பொருளாளராக நடவடிக்கை மேற்கொண்ட அதேவேளையில், இந்தத் திணைக்களம்சங்கத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்குகளைத் தயாரித்துள்ளது. இந்த ஆண்டிலும் சங்கத்தின் நிதிப் பொறுப்பை வகித்து பிராந்திய ரீதியில் அரச கணக்குள் திணைக்ககளத்தின் சேவை வியாபித்துள்ளது.

## 6. தொகுதி அபிவிருத்தி, பயிற்சி மற்றும் முற்பணக் கணக்குகள் பிரிவு

### 6.1 அரசாங்கத்தின் கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்துதல் மற்றும் அது தொடர்பான கணக்கு பதவியினரைப் பயிற்றுவித்தல்

மத்திய அரசாங்கத்தினதும் மாகாணசபைகளிலும் உள்ள சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பயன்படுத்தப்படுகின்ற CIGAS கணனி மென்பொருள் தொகுதி அபிவிருத்தி, பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் தேவையான அறிவுரைகளை வழங்குதல் இந்தப் பிரிவின் பொறுப்பாகும். அதற்கு மேலதிகமாக GPS கணனி மென்பொருள் பதிய பிரதியொன்றை வழங்குதல், பழைய பிரதியை இற்றைப்படுத்துதலும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் Windows ஐ அடிப்படையாகக்கொண்ட புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்களை மேற்கொண்டு 2017 ஆம் ஆண்டுக்காக பயன்படுத்தக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டுக்காக தொடர்ந்தும் பழைய CIGAS மூலம் கணக்கு சுருக்கங்களைப் பொறுப்பேற்பதில்லை என்பது பற்றி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளையில் அதன் பிரகாரம் 2016 சனவரி மாதமளவில் சகல நிறுவனங்களும் புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின்மூலம் கணக்கு சுருக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்ட சொத்துக்களைக் கணக்குவைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் 2016 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் நவீனமயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் ஆண்டிறுதி CIGAS செயலமர்வு மற்றும் அரச கணக்குகள் தணைக்களத்தில் இடம்பெற்ற சிகாஸ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அதுபற்றி தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துதல் மற்றும் பயிறிசயளித்தல் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை கணக்காளர்சேவைக்கு நியமிக்கப்பட்ட 191 புதிய உத்தியோகத்தர்களுக்காக இடம்பெற்ற நிதி அறிக்கையிடல் பற்றிய செயலமர்வுத் தொடரின் மூலமும் சிகாஸ் மற்றும் சொத்துக்களைக் கணக்குவைத்தல் சம்பந்தமாக அந்த உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்துவதும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ஆண்டிறுதியில் தொடர்ந்தும் சொத்துக்களைக் கணக்கு வைக்கும்போது முகங்கொடுக்கவேண்யேற்படுகின்ற கணக்குரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கும்நோக்கில் கணக்காளர்கள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்களின்பொருட்டு ஆண்டிறுதி பயிற்சிச் செயலமர்வு 2016 ஒக்டோபர் மாதத்திலிருந்து நடாத்தப்பட்டன. இதன்போது தொழிநுட்பப் பிரச்சினைகளைக் குறைத்து உரிய காலத்தில் சரியான கணக்குகளை அறிக்கையிடுதலில் உள்ள முக்கியத்துவம் பற்றியும் உத்தியோகத்தர்களுக்கு வலியுறுத்தப்பட்டது.

ஆண்டிறுதி செயலமர்வு/ கருத்தரங்குத் தொடர் மாவட்ட மட்டத்தில் இடமபெற்ற அதேவேளையில் அரச கணக்குகள் திணைக்களத்திலும் சிகாஸ் ஒருநாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. மேலும் இந்த செயலமர்வுக்காக விடயப்பொறுப்பு கணக்காளர்கள் மற்றும் விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்கள் பங்குபற்றச் செய்யப்பட்ட அதேவேளையில் அதன்மூலம் தெரியப்படுத்துவதற்கு மேலதிகமாக விடயத்தின் பொறுப்புக்கள் பற்றிய கணக்காளர்களின் கவனத்தைச் செலுத்துவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்பிரகாரம் 05 சிகாஸ் ஒருநாள் செயலமர்வுகள் இந்தத் திணைக்களத்தில் இடம்பெற்ற அதேவேளையில் அமைச்சுக்கள்,

திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் விதமாக 21 ஆண்டிறுதி சிகாஸ் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

ஆண்டிறுதி சிகாஸ் செயலமர்வுகளில் கொழும்பு மற்றும் கொழும்பைச் சூழவுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலுள்ள 150 கணக்குப் பிரிவு விடயப் பொறுப்பு கணக்காளர்களை 2016 செப்டம்பர் 02, 27 மற்றும் 29 ஆகிய திகதிகளில் அரச கணக்ககள் திணைக்களத்திற்கு வரவழைத்து நவீனமயப்படுத்தப்பட்ட புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் பற்றி தெளிவுபடுத்தப்பட்டது. இந்த ஒருநாள் மற்றும் ஆண்டிறுதிசெயலமர்வுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் விதம், 2017 ஆம் ஆண்டுக்ாகன கணக்குகளை ஆரம்பிக்கும் விதம் அதேபோன்று ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உரிய பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடக்கூடியதாக இருந்தது. அதன்பிரகாரம் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் சொத்துக் கணக்குகளை அறிக்கையிடும் நிறுவனங்கள் 90 வரை அதிகரித்துள்ள அதேவேளை ஆண்டிறுதியில் சொத்துக்களை அறிக்கையிடவேண்டிய சகல நிறுவனங்களும் சொத்துக் கணக்குகளை அறிக்கையிடுவதனை ஆரம்பிக்கும் நடவடிக்கையும் இடம்பெற்றன.

2016 ஆம் ஆண்டில் ஒவ்வொரு நிறுவனங்களினதும் கோரிக்கைக்கு அமைவாக அரச கணக்குகள் திணைக்களத்திலும் அந்த பல்வேறு நிறுவனங்களிலும் இடம்பெற்ற விசேட சிகாஸ் செயலமர்வுகள் பின்வருமாறு.

| | பயிற்சி செயலமர்வுகள் இடம்பெற்ற திகதி | நிறுவனம் | செயலமர்வு இடம்பெற்ற இடம் | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|---|
| 01 | 2016 சனவரி 16 | சப்ரகமுவா மாகாணசபை | இரத்தினபுரி கணனி பயிற்சிநிலையம் | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
| 02 | 2016 சனவரி 30 | அரச கணக்குகள் திணைக்களம் | அரச கணக்குகள் திணைக்களம் | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
| 03 | 2016 பெப்ரவரி 13 | வட மாகாணசபை | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
| 04 | 2016 மாரச் 29, ஏப்ரல் 05,18, 26 | புதிய கணக்காளர் பயிற்சி நிகழ்ச்சிதிட்டம், அரச கணக்குகள் திணைக்களம் | அரச கணக்குகள் திணைக்களம் | கணக்காளர்கள் |
| 05 | 2016 ஜுன் 09 | மாவட்ட செயலகம், மன்னார் | அரச கணக்குகள் திணைக்களம் | கணக்காளர்கள் |
| 06 | 2016 ஜுன் 17 | பிரதம செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் | அரச கணக்குகள் திணைக்களம் | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
| 07 | 2016 ஜுலை 26 | பயிற்சிக் கோரிக்கையின் அடிப்படையில் பல்வேறு நிறுவனங்கள் | அரச கணக்குகள் திணைக்களம் | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
| 08 | 2016 அக்டோபர் 07 | நிலஅளவைத் திணைக்களம் | நிலஅளவைத் திணைக்களம் | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | 2016 அக்டோபர் 14 | சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு | சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
| 10 | 2016 டிசம்பர் 17 | வட மாகாணசபை | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
| 11 | 2016 டிசம்பர் 27 | சப்ரகமுவா மாகாணசபை | பயிற்சி நிலையம், புஸ்ஸெல்ல | கணக்காளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் |

கணணி மென்பொருள் தொகுதி அபிவிருத்தி பராமரிப்பு பயிற்சியளித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தப் பிரிவினால் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் பின்வருமாறு

- கணக்குத் தொகுதிகளைப் பேணுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்
- காணப்படும் விதி மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கணக்குகளை வகைப்படுத்தல் மற்றும் கணக்கு குறியீடுகளை உருவாக்கி கணக்கு அறிக்கைகளை பேணுவதற்காகவும் பிரதான கணக்கு அலகுகளுக்கு அவற்றை அனுப்புவதற்கும் துணை நிற்றல்
- குறைந்த காலத்தில் பிரதான கணக்கு அலகுகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு தகவல்களின் செல்லுபடியாகும் காலத்தை பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரியின் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு வசதிகளை வழங்குதல்
- கணக்கு மற்றும் புள்ளிவிபரவியல் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதமாக அமைச்சுக்களிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் கிடைக்கின்ற தரவுகளைப் பேணுவதுடன் பிரதான கணக்கு தரவுத் தொகுதிக்கு தரவுகளைச் சேர்த்தல், ஆலோசனைகளை வழங்குதல் தரவுகளை செல்லுபடியாக்குதல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிக்கு தரவுகளை மாற்றுதலும் வழங்குதலும்
- வருடாந்த வரவு செலவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், அது தொடர்பான செலவினங்கள் மற்றும் முன்வரும் வருடத்திற்கான தேவைகளை ஏற்பாடு செய்து உயர் தரத்திலான கணக்கு முறையொன்றைப் பேணுவதற்கு அமைச்சுகளுக்காகவும், திணைக்களங்களுக்காகவும் உதவக்கூடிய பயிற்சி கற்கை நெறிகளை மேற்கொள்ளுதல்

## 6.2 முற்பணக் கணக்குகளைச் செயற்படுத்துதல்

### 6.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் பீ முற்பணக்கணக்கு

01. சகல அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்குரியதாக சமர்ப்பிக்கப்படுகின்ற நி.ஓ 506 டீ அறிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்கு, தனிக் கணக்குகளின் மீது மற்றும் திறைசேரி மீதிகள் உள்ளடங்களாக முற்பண கணக்கின் பொருட்டு சீராக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பிரகாரம் 25 நிறுவனங்களின் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 30% குறைவானதாகும். அதன் பிரகாரம் உரிய நிறுவனங்களை அடையாளம் கண்டு மேற்குறிப்பிட்ட கணக்குகளுக்கிடையில் காணப்படுகின்ற மாற்றங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அந்த நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க

அளவிலான நிறுவனங்கள் 2016 ஆம் ஆண்டில் கணக்குச் சுருக்கங்களின் மூலம் மாற்றங்கள் தீர்க்கப்பட்டுள்ள அதேவேளையில், ஏனைய நிறுவனங்களில் காணப்படுகின்ற மாற்றங்களைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தற்போது பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

02. மேலும் 2016 ஆம் ஆண்டில் சகல அமைச்சுக்களின் திணைக்களங்களிலும் தனிக் கடன் மீதி வகைப்படுத்தலின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் நிலுவைகள் பின்வருமாறு (காலப் பகுப்பாய்வின் பிரகாரம்) இடமாற்றம் பெற்றுச்சென்ற அலுவலர்கள் ரூபா 392 மில்லியன், சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள அலுவலர்கள் ரூபா 4 மில்லியன், கூட்டுத்தாபனங்கள் சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்காக நிரந்தரமாக விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் ரூபா 16 மில்லியன், மரணித்துள்ள அலுவலர்கள் ரூபா 60 மில்லியன், ஓய்வுபெற்ற அலுவலர்கள் ரூபா 389 மில்லியன், சேவையை விட்டுச் சென்ற / சேவையை முடிவுறுத்தியுள்ள அலுவலர்கள் ரூபா 563 மில்லியன், வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் ரூபா 126 மில்லியன், ஏனையவை 42 மில்லியன வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 118, தாபன விதிக்கோவை xxiv அத்தியாயத்தின் 04 ஆம் உறுப்புரை மற்றும் ஒஔை அத்தியாயம் 4:5 உப பிரிவின் பிரகாரம் அந்தக் கடன் நிலுவைகளை அறிவிடுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

03. 2016 ஆம் ஆண்டில் வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிடப்படாத முற்பணக் கணக்குகளின் தலைப்பின்கீழ் கொடுக்கல்வாங்கல்களைக் கணக்கு வைத்துள்ள அமைச்சுக்களை.'. திணைக்களங்களை அடையாளம்கண்டு பிழையான கணக்குவைத்தல்களை திருத்திக்கொள்ளுமாறு கடிதத்தின்மூலம் அறிவிக்கப்பட்டது. அதன்பிரகாரம் அந்த அமைச்சினால்/ திணைக்களத்தினால் டிசம்பர் மாதத்தில் பிரதான கணக்குச் சுருக்கத்தின்மூலமும் குறைநிரப்பு சுருக்கத்தின்மூலமும் சகல திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

04. அரசாங்க உத்தியோகத்தர்களின் ''பீ'' முற்பணக்கணக்கை செயற்படுத்துகின்ற 184 நிறுவனங்களிடையே எல்லையைத் தாண்டிய 45 நிறவனங்கள் அடையாளம் காணப்பட்டன. அதில் 33 நிறுவனங்களின் எல்லையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

05. நி.ஒ. 119 (2) (இ) பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் 2016 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. வருடத்தினுள் தொடர்புபட்டதாக கோரிக்கை விடுத்துள்ள அமைச்சுக்களுக்கு / திணைக்ககளங்களுக்கு அதற்கான அறிவுரைகளும் அனமதியும் வழங்கப்பட்டன.

### 6.2.2 திறைசேரியின் நானாவித முற்பணக் கணக்குகள்

இந்த முற்பணக் கணக்குகளின் ஊடாக மாவட்டச் செயலகங்களுக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை அறிவிடுதல் மற்றும் காணாமல் போன காசு, முத்திரை மற்றும் பற்றுச்சீட்டு போன்றவற்றுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களை அறவிடுவதற்கு ஏற்படுகின்றமை

2016 ஆம் ஆண்டுக்குரியதாக அட்டவணையின் பிரகாரம் மாவட்டச் செயலகங்களினால் காசின் மூலம் கடன் நிலுவைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

| கணக்கு இலக்கம் | மாவட்ட செயலகம் | காசின் மூலம் தீர்த்தல் (ரூ.) |
| --- | --- | --- |
| 7000/0/0/25003/418 | பொலனறுவை | 7,024,631.74 |
